






# “தமிழ்நாட்டு தமிழர்களுக்கு மட்டுமின்றி, உலகெங்குமுள்ள தமிழர் நலனுக்காக திராவிட மாடல் அரசு திட்டங்கள் தீட்டி வருகிறது!”

## சென்னையில் ‘அயலகத் தமிழர் தினம்– 2025’ விழாவைத் தொடங்கி வைத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, ஜன. 12–

சென்னை, நந்தம்பாக்கத்தில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஏற்பாட்டில், `அயலகத் தமிழர் தினம்-2025’ நிகழ்ச்சிகள் நேற்று தொடங்கின. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, வெளிநாடுகளில் செயல்பட்டு வரும் தமிழ்ச் சங்கங்கள் உள்ளிட்டவற்றின், அரங்குகளைப் பார்வையிட்டு, அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பாராட்டிப் பேசினார்.

அப்போது அவர் வேர்களைத்தேடி விழுதுகள் வருவது போல, தாய்மடியைத் தேடி பிள்ளைகள் வருவது போல 50-க்கும் அதிகமான நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான அயலகத் தமிழர்கள் இச்சிறப்புக்குரிய நிகழ்வில் பங்கேற்க வருகை தந்திருப்பது பெரு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது என்று அப்போது அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் ஆற்றிய உரை வருமாறு:-

உங்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பாக அயலகத் தமிழர் தின நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில், மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

### `எத்திசையும் தமிழ் வங்கி’

கடந்த வருடமும் அயலகத் தமிழர் தின நிகழ்வுகளைத் `தமிழ் வெல்லும்’ என்ற கருப்பொருளில் நான்தான் தொடங்கி வைத்தேன். இந்த வருடம் `எத்திசையும் தமிழ் வங்கி’ என்ற கருப்பொருளில் இந்த விழாவைத் தொடங்கி வைக்கிறேன்.

உலகின் பல்வேறு இடங்களில் இருந்து வருகை தந்துள்ள, உங்கள் அனைவரையும் நம் தாய் தமிழ்நாட்டிற்கு வருக, வருக என்று முதற்கண் வரவேற்கிறேன். இந்தச் சிறப்புக்குரிய நிகழ்வில் நாளைய தினம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று நிறைவு உரை ஆற்ற உள்ளார்.

### அயலகத் தமிழர் நலன்

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நம் `திராவிட மாடல் அரசு’ அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையை 2021-ஆம் ஆண்டு உருவாக்கியது.

இந்தத் துறை துவங்கப்பட்ட நாளில் இருந்து, இதன் செயல்பாடுகளைத் தொடர்ந்து கவனித்து வருகிறேன். ஒரு மாநில அரசின் துறை, இந்த



அளவிற்கு வெளிநாட்டில் இருக்கின்ற நம் தமிழ் மக்களின் நலனுக்காக உழைக்க முடியுமா என்று சொல்கின்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

இன்றைக்கு இத்தனை ஆயிரம் தமிழர்கள் இங்கே பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளீர்கள் என்றால் ,அதற்குத் துறையின் செயல்பாடுகளே காரணம். இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞரின் வழியில், உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்காகத் தாய் தமிழ்நாட்டில் இருந்து உழைத்துக்கொண்டு இருப்பவர் தான், நம் முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

### ‘வேர்களைத் தேடி விழுதுகள்’

இங்கே, அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை என 50-க்கும் அதிகமான நாடுகளில் இருந்து அரசுப் பொறுப்புகளில் உள்ளவர்கள், அதிகாரிகளாகப் பணியாற்றும் தமிழர்கள் வருகை தந்துள்ளீர்கள். `வேர்களைத் தேடி விழுதுகள்’ வருவதைப்போல, `தாய் மடியைத் தேடி பிள்ளைகள்’ வருவதைப்போல, தமிழ்நாட்டை நோக்கி நீங்கள் அனைவரும் வந்து இருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் அனைவரையும் நம் தமிழ்நாட்டில் சந்திப்பதில், உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறேன்.

இதுபோன்ற சந்திப்புகள்தான் நமக்கு இடையிலான அந்த உணர்வை, பாசத்தை இன்னும் அதிகமாக்கும் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். அயலகத் தமிழர்கள் நலனில், நம் கழக அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. அதற்கு ஒரு உதாரணமாகத்தான் `அயலகத் தமிழர் நல வாரியத்தை’ நம் முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்தார். அதில், இன்றைக்கு 26 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உலக அளவில் தமிழர்களின் உழைப்பும், ஆற்றலும் இன்றைக்குத் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

### தமிழர்களின் திறமை

‘கூகுள்’, `மைக்ரோசாப்ட்’, `ஆப்பிள்’ என உலகின் அனைத்து தலைசிறந்த நிறுவனங்களிலும் தமிழர்களின் திறமைக்கு என்று தனி மதிப்பு இருக்கிறது. அங்கெல்லாம் முக்கிய பொறுப்புகளில் நம் தமிழ் மக்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். வெளிநாடுகளில் தமிழ் மக்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால், நம் அயலகத் தமிழர் நலத்துறை, உடனே களத்தில் இறங்கி, அவர்களை மீட்டு எடுக்கிறது.

சமீபத்தில் நடந்த உக்ரைன், ரஷ்யா போர், இஸ்ரேஸ்-பாலஸ்தீன போர் போன்றவற்றின் போது அங்கு படிக்கும் மாணவர்களை நம் அரசு பத்திரமாக மீட்டு, தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்திருக்கிறது. இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 பேரை அயலகத் தமிழர் நலத்துறை மீட்டு வந்துள்ளது.

### தமிழ்ச் சங்கங்களுக்கு விருதுகள்

தமிழ்நாடு வாழ் தமிழர்களுக்கு எப்படித் திட்டங்கள் தீட்டப்படுகிறதோ? அதேபோல் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கும் பல்வேறு திட்டங்களை நம் திராவிட மாடல் அரசு தீட்டி வருகிறது. புலம் பெயர்ந்த மண்ணில் தமிழுக்காகப் பாடுபடும் தமிழ்ச் சங்கங்களுக்கு விருதுகள், `கனியன் பூங்குன்றனார் பெயரில் விருது’, `தமிழ் மாமனி பட்டம்’ போன்றவை நம் அரசு சார்பாக வழங்கப்படுகிறது.

இந்த வருடம் புதிதாக வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுக்கும் நமக்கும் இணைப்பை ஏற்படுத்தும் வகையில்,



தமிழர்களுக்கு, ‘சிறந்த பண்பாட்டுத் தூதுவர்’ என்ற விருது வழங்கப்படுகிறது.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் பிள்ளைகள், தமிழ் மொழியைக் கற்பதற்கு ஏதுவாகத் தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பாக, நூல்களை வழங்கி, அவர்கள் தமிழ் கற்பதற்கான வாய்ப்புகளை நம் திராவிட மாடல் அரசு, கழக அரசு ஏற்படுத்தி உள்ளது.

அயலகத் தமிழர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் போற்றுகின்ற வகையில், உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு, விருதுகளையும், பரிசுகளையும் நம் கழக அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. இப்படி இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகம் எங்கும் உள்ள தமிழர்களுக்கும் உழைக்கின்ற அரசாக நம் திராவிட மாடல் அரசும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் திகழ்ந்துகொண்டு இருக்கிறார்.

அந்த வகையில், இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து இருக்கின்ற நம் மாண்புமிகு அமைச்சர் நாசர் அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ‘அயலகத் தமிழர் தினம் - 2025’ மிகப் பெரிய வெற்றியைப் பெறட்டும். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்தவாய்ப்புக்குநன்றிகூறிவிடைபெறுகிறேன்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தா,மோ.அன்பரசன், சா.மு. நாசர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

தமிழ்நாடு அயலக நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்துல்லா, கலாநிதி வீராசாமி, ராஜன் நரசிங்கன் (மொரீஷியஸ்), சுந்தரலிங்கம் பிரதீப் (இலங்கை), ரவூப் ஹக்கீம் (இலங்கை), சண்முகம் மூக்கன் (மலேசியா), சண்முகம் மூக்கன் (மலேசியா), இராஜேந்திரன் தங்கவேலு கோவேந்தர் (தென் ஆப்பிரிக்கா), முகமது கனி முகமது எஹியா (ஐக்கிய அரபு அமீரகம்),

வேலு சிங்கார (இங்கிலாந்து), பியாரிக் ராபர்ட் (ரீ யூனியனின் தீவு), சிவ நடராஜா, (அமெரிக்கா), வோட்ஸ்வொர்த் அய்யாதுரை (அமெரிக்கா), அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி, அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்கள் கால்டுவெல் வேல்நம்பி, சிங்கப்பூர் ராம், துபாய் மீரான், மும்பை மீரான், லண்டன் பைசல், வழக்கறிஞர் புகழ் காந்தி, உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த பல தமிழர்களும் கலந்து கொண்டனர்.

---

## தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு

# திறமையான மனித வளம் இருக்க வேண்டியது அவசியம்!

## சென்னையில் தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு நிறைவு நாளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, ஜன.12–

**சென்னை நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு (யூமாஜின் 2025) இரண்டு நாள்கள் நடைபெற்றது. இதில் உலகம் முழுவது மிருந்து தகவல் தொழில் நுட்ப நிபுணர்களும் வல்லுநர்களும் கலந்து கொண்டனர். நிறைவு நாளான நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர் தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்குத் திறமையான மனித வளம் இருக்க வேண்டியது அவசியம். திராவிட மாடல் அரசு, திறமைசார்ந்த பணியாளர்களை உருவாக்க, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது, என்று குறிப்பிட்டார்.

அப்போது அவர் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:

தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் (யூமாஜின் 2025) நிறைவு நாளில், கடந்த இரண்டு நாட்களில் நாம் பரிமாறிக் கொண்ட கருத்துக்கள் என்னைப் பெருமையடையச் செய்கின்றன.

முதலாவதாக, யூமாஜின் 2025 ஐ மிகப் பெரிய வெற்றியாக்கியதற்கு, தகவல் தொழில் நுட்பத்துறையின் அமைச்சர் அண்ணன் பி.டி.ஆர். மற்றும் இந்தத் துறையின் அதிகாரிகளுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உத்வேகம் ஊட்டும் உரைகள்

இந்தக் கூட்டம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில், தமிழ்நாட்டை உலகளவில் கொண்டு சேர்த்துள்ளது.

இக்கருத்தரங்கில், புதுமையான கருத்து பரிமாற்றங்கள் , உத்வேகம் ஊட்டும் உரைகள் மற்றும் டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்கும் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதில், எப்போதும் முன்னணியிலேயே இருந்து வந்துள்ளது. முதலமைச்சராக இருந்த காலத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் மாநிலத்தின் முதல் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை 90 களின் மத்தியில் அறிமுகப்படுத்தினார்.

அவர் கணினி அறிவியலை மாநிலப் பள்ளிக்கல்விப் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தினார்.

கலைஞரின் பாதையைப் பின்பற்றி, நம் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டை தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில் முன்னோடியாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

### இளைஞர்களின் கனவுகள்

கழக அரசு புத்தொழிலுக்கான சூழலை வலுப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் புத்தொழில் மற்றும் தொழில்முனைவுப் பண்புகள் ஆழமாக வேரூன்றியுள்ளன. முதலமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ், திராவிட மாடல் அரசு இளைஞர்களைத் தொழில் முனைவர்களாக மாற்ற, பேருதவிப் புரிந்து வருகிறது. இளைஞர்களின் சிந்தனைகளை புத்தொழிலாக மாற்ற, நமது அரசு ஆதரவளித்து வருகிறது. இதன் விளைவாக, தமிழ்நாடு தொழில்துறையில் வேகமாக முன்னேறி வருவதைக் காணலாம்.

நமது அரசு பதவியேற்றபோது, நம் மாநிலத்தில் சுமார் 2,300 புத்தொழில் நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. இன்று, நமது கொள்கைகள் மற்றும் ஆதரவினால் அந்த எண்ணிக்கை 10 ஆயிரமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் ஸ்டார்ட்அப் சூழல் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. ஐ டி.என்.டி. ( iTNT iTamil Nadu Technology) போன்ற முயற்சிகள் மூலம், தமிழ்நாடு அரசு பிற இன்குபேட்டர்களுடன் இணைந்து ஸ்டார்ட்அப்களை ஊக்குவிக்கிறது.

இந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை விரிவாக்கவும், மூலதன நிதியை பெறவும், அரசு தரப்பில் உதவப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியின் மூலம், புத்தாக்கத்தை ஆதரித்தல், டீப்டெக் தொழில்நுட்பத்தைப் பலப்படுத்துதல் மற்றும் புதுமை சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டமைப்பதில், தமிழ்நாடு மேலும் முன்னேறியுள்ளது.

இந்த யூமாஜின் நிகழ்ச்சியில், புதிய தொழில்நுட்பங்களுக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவுத் துறையிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது. தொழில் பங்குதாரர்கள் அனைவரின் ஆதரவுடன், மாநிலத்தில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கட்டமைப்பு மேலும் வளரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### உலகளாவிய போக்குகள்

தமிழ்நாடு, வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தும் தொழில் செய்வதற்கு எளிமையான இடமாகவும் புகழ் பெற்றுள்ளது. டாக்டர் கலைஞர், தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தார். உலகளாவிய போக்குகளை அறிந்து, சென்னையில் `டைடல் பார்க்கை’ உருவாக்கி அத்துறையை வலுப்படுத்தினார்.

நம் திராவிட மாடல் அரசு முதலீட்டாளர்கள் தங்கள் நிறுவனங்களை, எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அமைக்கும் பொருட்டு, தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எல்காட் (ELCOT) முக்கிய பங்கு வகிக்கிறது.

தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்குத் திறமையான மனிதவளம் இருக்க வேண்டியது அவசியம். திராவிட மாடல் அரசு திறமைசார்ந்த பணியாளர்களை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதற்கு ஆதரவாக, நமது முதலமைச்சர் `நான் முதல்வன் திட்ட’த்தைத் துவக்கினார், இதன் மூலம் இதுவரை தமிழ்நாட்டில் சுமார் 30 இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

`நான் முதல்வன் திட்ட’த்தின் கீழ் தமிழ்நாடு தனது மாணவர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சிகளை, முன்கூட்டியே வழங்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நம் மாணவர்களுக்கு உலகளாவிய பார்வையைக் கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகிறோம். சமீபத்தில், எங்கள் மாணவர்கள், நான் முதல்வன் திட்டத்தின் `ஸ்கவுட் திட்ட’த்தில் பிரிட்டன் மற்றும் ஜப்பானுக்குச் சென்று வந்தனர்.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

புதிய தொழில்நுட்பப் போக்குகளைப் பற்றி அறிந்துகொள்ள ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த யூமாஜின் நிகழ்ச்சியில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு அமைப்புகளுடன் கையெழுத்தாகியுள்ளன.

தமிழ்நாட்டில் வீடியோ கேம்ஸ் சமுதாயம் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளது. இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் மற்றும் விஷுவல் எஃபெக்ட்ஸ் கேம் அனிமேஷன் சமுதாயம் தமிழ்நாட்டில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. இது உள்ளூர் மாணவர்களின் திறன்களை வளர்த்தெடுப்பதுடன், தமிழ்நாட்டை வீடியோ கேம் உருவாக்கத்தின் மையமாக மாற்றும்.

இங்குள்ள கண்காட்சி அரங்குகள் எங்கள் தொழில்நுட்பத் துறையின் புதுமை சார்ந்த பொருளாதாரத்தின் மிகப்பெரிய சாத்தியங்களை வெளிப்படுத்துகின்றன.

யூமாஜின்2025ஐ ஒரு மாபெரும் வெற்றியாக மாற்றிய உங்கள் ஆர்வம் மற்றும் பங்களிப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை `ஒரு டிரில்லியன் டாலர்’ பொருளாதாரமாக மாற்ற எங்கள் முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்ற, வரும் நாட்களில் நாம் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்.

இது முடிவு அல்ல, ஆனால், தமிழ்நாட்டைப் புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்லும். பல புதுமையான முயற்சிகளின் தொடக்கமாக அமையும். நாம் இக்கருத்தரங்கில் பெற்ற அறிவு மற்றும் கூட்டுணர்வை முன்னெடுத்து அனைவருக்கும் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவோம். ஒன்றிணைந்து நாம் தமிழ்நாட்டை உலகளவில் புத்தாக்கத்தின் தலைமையிடமாக மாற்றுவோம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் பழனிவேல் தியாகராஜன், தா.மோ.அன்பரசன், கூடுதல் முதன்மைச் செயலாளர் குமார் ஜெயந்த், டாக்டர் நீரஜ் மிட்டல், இந்திய அரசுச் செயலாளர், தொலைத் தொடர்புத் துறை, மின் ஆளுமை துறை இயக்குநர் கோவிந்த ராவ், தமிழ்நாடு பைபர் நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் ரமணா சரஸ்வதி, முன்னணி விஞ்ஞானி டாக்டர் சந்திரிகா கௌஷிக், தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீகிருஷ்ணா, ஹெக்ஸாவேர் டெக்னாலஜிஸ் ஹலிமா ஹாலண்ட், ஐ.ஐ.டி. மெட்ராஸ் ஆராய்ச்சிப் பூங்கா தலைமை நிர்வாக அதிகாரி நட் மலு பிள்ளை உள்பட பலரும் கலந்து கொண்டனர்.